11வது ஆண்டில்

# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

விளம்பரம்

VLAMBARAM

☎ 416-282-8059

416-282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 11 NOVEMBER 01, 2001 பாலம் 21

அந்திராக்ஸ் ஒரு தொற்று வியாதியா? (பக்கம் 02)

எது நினைக்கின்றமோ, அதுவே நடக்கும்.... (பக்கம் 05)

பாவனையிலிருந்த வாகனங்கள் வாங்குபவர்களிற்கு.... (பக்கம் 13)

கிரிக்கெட் போட்டியில் கனடிய தமிழன் Vs ஸ்ரீலங்காத் தமிழன் (பக்கம் 06)

இடுப்புச் சதை குறைய திரிகோணம் (பக்கம் 04)

மணிரத்தினம் ஒரு மனித வெடிகுண்டா? (பக்கம் 08)

சமயங்கள் ஏலியன்களை எதிர்வு கூறியுள்ளதா? (பக்கம் 09)

பண்டைய காலத்தில் 'உடன் போக்கு' (பக்கம் 11)

முதல் தரம் வீடு வாங்குபவர்களிற்கு சிறந்தது (பக்கம் 19)

## உன்னை அறிந்தால்

சூரியன் உதிக்கின்றது, மறைகின்றது. உதிக்கின்றது, மறைகின்றது.... இந் நிகழ்வு காலாகாலமாக நடைபெற்று வருகின்றது. நடைபெற்றுக் கொண்டே இருக்கும். உலகம் உருளுகிறது. பௌர்ணமியும் அமாவாசையும் வருகிறது போகிறது. ஆண்டுகள் மாறுகின்றன. இவை யாவும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இயங்குகின்றன. இது இயற்கை. இதனைப் படைத்தவன் அல்லது ஆக்கியவன் பூரணமாகத் தான் செய்திருக்கின்றான்.

இந்த இயற்கையில் படைக்கப்பட்ட மனித இனம் சில செயல்களில் தேவர்களைப் போலவும் மிருகங்களைப் போலவும் வாழுவதில் தவறு சொல்வது நியாயமா? ஒவ்வொரு மனிதனும் தனது சிந்தனைக்கு எட்டிய அளவில் சிந்திப்பான். சில செயல்கள் தான் வளர்ந்த வளர்க்கப்பட்ட சூழலுடன், அவனின் செயல்களும் செயற்பாடுகளும்

(தொடர்ச்சி 17 பக்க ம்)



தீபாவளி நல்வாழ்த்துக்கள்

*அன்பர்கள், நண்பர்கள், விளம்பரதாரர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் உளம்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்.* – Vlambaram publications



RE/MAX Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க பூரண ஆலோசனை பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB

இழந்த தலைமுடியை மீண்டும் பெற வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA & Gift

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151
2602 Eglinton Ave.E.
Toronto, Ont., M1K 2R9
www.sabona.ca
www.tamilclub.com/sabona

அடுப்பங்கரையில் சொல்லப்படுவதை எல்லாம் வீட்டுக்கு நடுவரையில் காது கொடுத்துக் கேட்கக் கூடாது. - ஆங்கிலம்

Singapore Communication

- $25.00
- 100 + 50 bonus Min Free
- Fri: 6p.m. - 8a.m. Free
- C/F C/W Free - Messaging Pack &
- Call ID Free For (3) Months
- Free Gift Available in Store

416 - 740 - 5292
416 - 745 - 2378 (Sathi/Raj)
Hot Line: 416 - 866 - 9700



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life

Liberty Mutual

✆ 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (91)

-விஜே குலத்துங்கம்




இப்போதெல்லாம் ஒவ்வொருவர் வாயிலும் அடிபடுவது 'அன்திராக்ஸ் - Anthrax' என்னும் வார்த்தை தான். அமெரிக்காவில் பல நூற்றுக்கணக்கானோர் இந்த நோயிற்கு காரணமான பக்டீரியாக்களின் வித்திகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. பல இடங்களில் கனடா உட்பட இந்த அன்திராக்ஸ இருப்பதாக புரளியும் கிளப்பப்பட்டு உள்ளது. Weapons of mass destruction எனப்படும் பேரழிவை உண்டுபண்ணும் ஆயுதங்கள் நான்கு வகைப்படும் அவையாவன உயிரியல் ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள், அணு ஆயுதங்கள், கதிர்வீச்சு ஆயுதங்கள் ஆகும். இந்த அன்திராக்ஸ் உயிரியல் ஆயுதங்களுள் அடங்கும். அன்திராக்ஸ் என்பது பசிலஸ் அன்திராசிஸ் - Bacillus Anthracis எனப்படும் பக்டீரியா ஆகும். உலகின் சில பகுதிகளில் மாடுகளிலும் மற்றைய சில விலங்குகளிலும் இந்த பக்டீரியா காணப்படும். வட அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் அதிகமாக காணப்படுவதில்லை. ஆனால் மத்திய அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் ஐரோப்பாவின் தெற்கு, கிழக்கு பகுதிகளிலும் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் பரவலாகக் காணப்படும்.

இந்த பக்டீரியா சாதாரண கண்ணுக்கு தெரியாத அளவு மிகச் சிறிய நுண்ணுயிர் ஆகும். இந்த பக்டீரியா Spores எனப்படும் வித்திகளை உருவாக்கும். இவை 80 வருடங்களுக்கு மேலாகவும் உறங்கு நிலையில் சாகாமல் இருக்கக் கூடியன. சாதகமான சூழ்நிலை கிடைக்கும் போது முளைக்கும். மூன்று விதமான அன்திராக்ஸ் நோய்கள் தோன்றலாம். இது பாதிக்கப்பட்டவரின் உடலில் எங்கு தாக்குகின்றதைப் பொறுத்து வேறுபடும்.

முதலாவது வகை Inhalation எனப்படும். சுவாசிக்கும் போது மூச்சுடன் இந்த கப்டீரியாவின் வித்திகள் மூக்கினூடாக சுவாசப்பையை அடைந்து அங்கு இந்த வித்திகள் மீண்டும் உயிர்ப்படைந்து பெருகும். அதிகமாக இரண்டு தொடக்கம் ஐந்து நாட்களுக்குள் இவை பெருகி அறிகுறிகளை தோற்றுவிக்கும். சில வேளைகளில் 60 நாட்கள் வரையிலும் கூட எடுக்கலாம். இதன் அறிகுறிகள் சாதாரண flu எனப்படும் தடிமன், காய்ச்சல் போன்று காணப்படும். தடிமன், காய்ச்சல், தசைநார்களில் வலி, இருமல் போன்ற அறிகுறிகள் தோன்றும். உடலின் எதிர்க்கும் சக்தி ஆரம்பத்தில் தொழிற்பட்டாலும் நாளடைவில் அது வலிமை குன்ற, அதிகளவு காய்ச்சல், மூச்சுவிடக் கஷ்டம் ஆகிய அறிகுறிகள் தோன்றி மரணம் ஏற்படும். சிகிச்சையளிக்கப்படா விட்டால் நோய் பீடிக்கப்பட்ட 90 வீதமானவர்களுக்கு மரணம் ஏற்படும்.

இரண்டாவது வகை Cutaneous Anthrax - அதாவது தோலில் உண்டாகும் அன்திராக்ஸ் எனப்படும். இது தாக்கம் குறைந்தது. நோய்வாய்ப்பட்ட விலங்குகளில் இருந்து பெறப்பட்ட கம்பளி, தோல் மற்றும் உரோமப் பொருட்களை கையாளும் போது, தோலிலுள்ள காயங்களினூடாக இந்த பக்டீரியா உட்புகுகின்றது. முதலில் பூச்சி கடித்தது போல தோலில் சிறிது வீக்கம் ஏற்படும். பின்னர் வலியில்லாத அல்சர் புண் போல மாறும். 1 தொடக்கம் 3 ச.மீ விட்டமுள்ள நடுவில் ஒரு கறுப்புப் புள்ளியும் இருக்கும். இந்த புண்களுக்கு அண்மையிலுள்ள மூட்டுகளில் உள்ள நிணநீர்க் கலங்களில் வீக்கம் ஏற்பட்டு நெறி கட்டும். சிகிச்சை எடுக்காதாவர்களில் 20 வீதத்தினருக்கு மரணம் ஏற்படும்.

மூன்றாவது வகை intestinal Anthrax எனப்படும். இது குடலில் ஏற்படுவது ஆகும். அன்திராக்ஸ் நோயுள்ள விலங்குகளில் அல்லது கிருமி தொற்றிய விலங்குகளின் இறைச்சியை உண்ணும் போது இந்த பக்டீரியா குடலுக்குள் செல்கின்றது. முதலில் குடலினுள் வீக்கங்கள் ஏற்படும். பசிக்காமல் இருத்தல், வாந்திபேதி, காய்ச்சல் போன்றவை ஏற்படும். வயிற்றில் வலி ஏற்பட்டு வயிற்றோட்டமும் ஏற்படும். பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை ஏற்காதவிடத்து 25 - 60 வீதமானவர்களுக்கு மரணம் ஏற்படும்.



உடலினுள் இருக்கும் போது, உறங்கு நிலையில் இருக்கும் வித்திகள் உயர்ப்படைந்து, முளைத்து, புதிய பக்டீரியாக்களை உண்டாக்கி நச்சுப் பொருட்களை சுரக்கின்றது. இந்த நச்சுப் பொருட்கள் இழையங்களை நஞ்சாக்கி, உறுப்புகளை செயலிழக்கச் செய்கின்றது. மற்றைய இரு வகையைவிட சுவாசத்தால் உட்புகும் போது நேரடியாக இழையங்களை தாக்கி இலகுவாகப் பெருகுவதால் அதிகமான சந்தர்ப்பத்தில் மரணம் உண்டாகின்றது. இந்த நோயிற்கு சிகிச்சை அளிக்க CIPROFLOX ACIN என்ற Antibiotic மருந்துகள் உபயோகிக்கப்படுகின்றன. சுருக்கமாக இதனை CIPRO என அழைப்பார்கள் இதை BAYER என்ற நிறுவனம் தயாரித்து வருகின்றது. ஆரம்பத்தில் இந்த மருந்து ஒன்றுதான் குணப்படுத்தக் கூடியது என்று கூறினாலும், இப்போது அமெரிக்காவின் உணவு, மருந்துக்குரிய கட்டுப்பாட்டு நிறுவனம் ஆகிய FDA ஆனது பெனிசிலினும் doxycycline என்ற மருந்தும் நோயைத் தடுக்கக் கூடியது என கூறியுள்ளார்கள்.

இதைத் தடுப்பதற்கு தடுப்பூசி அல்லது Vaccine ஒன்றே ஒன்றுதான் இதுவரையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது. இது BIOPORT என நிறுவனத்தால தயாரிக்கப்படுகின்றது. ஆனால் இந்த நிறுவனம் தனது தயாரிப்பில் தரத்தைப் பேணவில்லை என்ற காரணத்தினால் FDA இன் அறிவுறுத்தலின் பேரில் 1998ஆம் ஆண்டு இந்த vaccine இன் உற்பத்தியை நிறுத்தியது. மீண்டும் இதை ஆரம்பிப்பதற்கு சென்ற கிழமை விண்ணப்பத்திருக்கின்றது.

அன்திராக்ஸ் ஒரு தொற்று வியாதியா என்ற கேள்வி எழலாம். இது தொற்று நோய் அல்ல. ஒருவரில் இருந்து இன்னுமொருவருக்கு தொற்றமாட்டாது. ஆனால் காற்றில் வித்திகள் இருந்தால், அவற்றை சுவாசிக்கும் போது இது எங்களை தொற்றுகின்றது. 100 கிலோகிராம் வித்திகளை காற்றில் விடுவித்தால், வாஷிங்டன் போன்ற நகராமாயின் 1,30,000 தொடக்கம் 3 மில்லியன் மக்களை இது கொல்லக் கூடியது. காற்றில் இருந்தால் எல்லோரையும் தொற்றுமா என்ற கேள்வி எழலாம். இதற்கு இல்லை என்றுதான் கூற வேண்டும். அதிகமான வித்திகள் உறங்கு நிலையில் இருக்கும். இவை ஆபத்தை விளைவிக்காது. போதியளவு இயக்கமுள்ள வித்திகள் இருந்தால்தான் நோய் தோன்றும். சில வித்திகள் உடலின் எதிர்க்கும் சக்தியினால் அழிக்கப்பட்டுவிடும். ஏறக்குறைய 10,000 வித்திகள் இருந்தால் அது நோயை தோற்றுவித்து 10 போ்களில் 9 பேர் வரை இறக்கச் செய்யும்.

அன்திராக்ஸ் நோய்க் கிருமிகளை தயாரிப்பது கஷ்டமா? 1972 ஆம் [illegible] அமெரிக்கா, ரஷ்யா, ஈராக் ஆகிய நாடுகள் உட்பட 118 நாடுகள் இவற்றை தயாரிப்பதில்லை என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன என்றாலும் 1970 களில் குறைந்தது 17 நாடுகளாவது உயிரியல் ஆயுதங்களை வைத்திருந்தன என அறியப்படுகின்றது. ஓரளவு உயிரியல் தொழில்நுட்பம் பற்றி தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் ஆரம்பிப்பதற்கு சிறிதளவு பக்டீரியாக்கள் இருக்க வேண்டும். ஒரு முறை தயாரிக்கப்பட்டால் நீண்ட காலத்திற்கு இவை சேமிக்கப்படலாம்.

அநேக புரளிகள் கிளப்பப்பட்டாலும் கனடாவில் இந்த கட்டுரை எழுதப்படும் வரை, அன்திராக்ஸ் நோய் வித்திகள் கண்டு பிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

******************************************************

*"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது* wijeyaku@hotmail.com *என்ற முகவரிக்கு e-mail ஐ எழுதி அனுப்பவும்.*


13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

☎: (416) 267-0408

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | |
| | ■ | | ■ | ■ | ■ | ■ | ■ |
| | ■ | 3 | | 4 | | | |
| | ■ | | ■ | | 5 | ■ | |
| | 6 | ■ | | ■ | ■ | ■ | 7 |
| ■ | 8 | | 9 | | | | ■ |
| | ■ | ■ | ■ | | ■ | ■ | 10 |
| 11 | | | | 12 | | | |

**குறுக்கு எழுத்துப் போட்டி இல. 124**

**இடமிருந்து - வலம்**

1. அமெரிக்கா தற்போது குண்டு மழை பொழியும் காந்தகாரின் இளவரசி ஒருத்தி நமது இதிகாசம் ஒன்றில் வரும் இந்த அரசனின் பட்டத்து ராணி.
3. திருமணத்தில் கன்னிக்காலுக்கு உபயோகிக்கப்படும் மரம்
5. கப்பம் (வல - இட)
6. ஆகாயம் (வல - இட)
8. அமெரிக்காவை ஒரு கலக்கு கலக் வரும் ஒரு நோய் கிருமி
11. நிலம், நீர், காற்று, நெருப்பு, வெளி இவற்றை சேர்த்து இவ்வாறு கூறுவர்

**மேலிருந்து - கீழ்**

1. சூரியன் 2. பரம்பரை
4. ஒழுங்கு 5. செல்வம் (கீழ்-மேல்)
7. நாசி (கீழ்-மேல்) 8. ஆசை (கீழ்-மேல்)
9. சதை (கீழ் - மேல்) 10. தானியம் ஒன்று
11. கணவன் (கீழ் - மேல்) 12. 10 நாட்கள் கொண்டாடப்படும் இவ்விழா, இந்தியாவில் இவ்வாறு அழைக்கப்படும் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் NOVEMBER 28, 2001க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ப | ன் | னீ | ர் | செ | ல் | வ | ம |
| த் | ■ | ■ | ■ | ய் | ■ | ■ | வ |
| த | ■ | ம் | த | யு | ஆ | ■ | ரு |
| ரை | ■ | ■ | ■ | ள் | யு | றை | உ |
| மா | ரு | த | ம் | ■ | ள் | ■ | ■ |
| ற் | ■ | ரி | ள | க | ■ | கை | கு |
| று | ஊ | ■ | ரா | ■ | ■ | ர | ■ |
| ■ | ர் | ■ | ஏ | ற | த் | தா | ழ் |

**123இல் வெற்றி பெற்றோர்**

1) Miss. C. Ponniah, Scarborough, Ont.
2) O. மூர்த்தி Mississauga, Ont.

* ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*

**தமிழ் நாட்டில் பிரயாண சேவை**

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்[illegible]க்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: **044-621-0294**



**J DAYCARE**

- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- **ECE** தகுதி பெற்ற நடத்துனர்
- **TAX RECEIPT** வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00 மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை
- சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

**1 Hr. - $3.00**
**Day - $15.00**
**Week - $60.00**

தினசரி நடவடிக்கைகள்:-

* உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

☎ 416-502-3033

**151 Lamareaux Dr., TownHouse 99A (Finch/Birchmount)** தொடர்புகளுக்கு: **Mrs. S. J.** சௌந்தரநாயகம்

# APPLEMORE AUTOMOTIVE


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

Ontario's Drive Clean
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple

---

தமிழ் சிறுவர்களுக்கோர் இணையத் தளம்!

# www.tamilkidz.com

**Suresh Subraminiam**
☎: 416 438-3155 Office: 416 325-3824
e-mail: suresh@sureshs.ca

---

## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



*>Railing > Fencing >Welding*

Free Estimates
Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

---


தமிழர் நிர்வாகத்தில்

ஒரு

# EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது
ஆனால்

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள்,(Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)





சமோசாவிற்கு அழையுங்கள்
T.P 416-332-0944
5 SAMOSA $1.00

**Embassy அமைந்துள்ள இடம்: (FINCH / MIDDLEFIELD)**
☎ (416) 332-8451 **5200 FINCH AVE., SCARBOROUGH**



# ஆரோக்கிய வாழ்வு (68)

- *N.* செல்வசோதி

## யோகாசனம் கற்றுக் கொள்ளுங்கள்

### திரிகோண ஆசனம் (Triangle)

எனது அருமை 'உலக தமிழோசை' வாசகர்களே! இம்முறை ஒரு முக்கியமான ஆசனத்தைக் கற்றுக் கொள்ளப் போகின்றோம். பெரும்பாலான ஆசனங்கள் முதுகெலும்பை முன்புறமாகவோ அல்லது பின்புறமாகவோ வளைக்கும் ஆசனங்களே. ஆனால் முதுகெலும்பைப் பக்க வாட்டில் வளைக்கும் ஆசங்களில் முக்கியமானது திரிகோண ஆசனமே.

நம்மிடையே பலருக்கு இடுப்புப் பகுதியில் சதை அதிகமாகத் தொங்கும். அதிலும் பெண்களுக்கு பார்க்கவே சகிக்காது. இடுப்புப் பகுதி மட்டும் உரல் மாதிரி அமைந்திருக்கும். இவ்வாறாக உருப் பெற்றிருக்கும் சதைகளைக் கரைக்க திரிகோண ஆசனப் பயிற்சிதான் பேருதவி புரிகிறது. ஆசன நிலையில் மூன்று கோணங்களை உண்டாக்குவது போல் தோற்றமளிப்பதால் 'திரிகோண ஆசனம்' என்று பெயர் வந்தது. இதனை சிறுவர் முதல் பெரியவர்கள் வரை கற்றுக் கொள்ளலாம். பார்வைக்கு மிக எளிதாகத் தோன்றும். ஆனால் உடல் பருத்தவர்கள், வயோதிபர்கள் மிகவும் கவனமாகவும் நிதானமாகவும் செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். அவசரப்பட்டு செய்வதால் இடுப்பில் பிடிப்பு ஏற்பட்டு குனியவோ வளையவோ முடியாமலும் செய்துவிடும். இரண்டு வாரகாலம் ஆசனத்தை அரை குறையாகச் செய்து வர வேண்டும். எடுத்த எடுப்பிலேயே முழுமையாகச் செய்ய முயற்சிக்க வேண்டாம். சிறிது சிறிதாக முயற்சித்து அதிக சிரமமின்றி உடலை வளையச் செய்யும் வரை நிதானமாகச் செய்து பின் முழுமையாகச் செய்வதே சிறந்தது.

**திரிகோண ஆசனம் செய்முறை**




கால்களை இரண்டரை அடி முதல் மூன்று அகலமாக வைத்துக் கொள்ளவும். கைகள் இரண்டையும் பக்க வாட்டில் தோளுக்கு நேராக நீட்ட வேண்டும். மிக மெதுவாக வலது பக்கம் சாயவும் பின் கைகளின் கட்ட விரலால் கால்களின் கட்ட விரலைத் தொட முயற்சிக்க வேண்டும். இந்த நிலையில் 20 வினாடிகள் வரை இருக்கவும். பின் மெதுவாக பழைய நிலைக்கு வரவும். இப்போது கைகள் இரண்டும் ஒரே நேர் கோட்டில் இருக்கிறதா என்று கவனிக்கவும். பின் இடது பக்கம் சாய வேண்டும். இடது கையின் கட்ட விரலால் இடது காலின் கட்ட விரலைத் தொட முயற்சிக்கவும் முடிந்த அளவில் முயற்சிக்க வேண்டும். ஒரு சில நாட்கள் பழகினால் முழுமையான நிலையில் பயிற்சி செய்யலாம். வலுக்காட்டாயமாகத் தொட முயற்சித்தால் இடுப்பில் பிடிப்பு ஏற்படும்.

**பலன்கள்**

இடுப்புச் சதைகள் குறையும். முதுகெலும்பு பக்க வாட்டில் திருப்பப் படுவதால் அதிகமாக வளையும் தன்மை ஏற்பட்டு உடல் முழுவதும் இரத்த ஓட்டம் சீராக நடைபெற வழி வகுக்கிறது. இடுப்புவலி, அடிமுதுகு வலிகள் நீங்கும். கூன் நிமிரும். வயிற்றுப் பகுதியும் சேர்ந்து திருப்பப்படுவதால் வயிற்றின் உள் உறுப்புகள் நன்கு செயல்படும். இடுப்பிலுள்ள வாயுப்பிடிப்புகள் நீங்குகின்றன.


**ELECTRICAL REPAIRS**



உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

முருகதாஸ் - ☎ 416-261-6883

**Safety Truck**
**Training School Ltd.**

**Training & Trucking Classes A, D & Z**

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (7ஆம் ஆண்டு) வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**We accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**In Classes**

- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**

Truck Driving போதனாசிரியர்

14 Years Canadian Experience with Trucks)

**Tel: (905) 793-9546 / (416) 616-5979**

**250 Summerlea Road, Brampton, ON**

**ரதீக்கா நகை மாளிகை**



உங்கள் விருப்பமோ குறைந்த விலையில் வாங்குவது, **எங்கள் விருப்பமோ** இனிமேல் யாரும் குறைக்க முடியாத விலையில் தருவது

உங்கள் விருப்பமோ இந்தநகைகளை எங்கே வாங்கியது என நண்பர்கள் கேட்பது, **எங்கள் விருப்பமோ** ரதீக்காவில் வாங்கியது என நீங்கள் பெருமை உடன் சொல்வது

இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட மிகப்பிரமாண்டமான காட்சியறையில் ரதீக்கா நகைமாளிகை உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

உங்கள் விருப்பமோ குறித்த தவணையில் பெறுவது, **எங்கள் விருப்பமோ** ஒருநாள் ஏனும் முந்தியே தருவது

தாலிக்கும் நகைகளுக்கும் ஓடர் கொடுத்தாச்சு, காரை எடு இனிக் கூறை அலுவலைப் பார்ப்பம் என்று அலைய வேண்டாம். **ரதீக்கா நகை** மாளிகையும் **மஞ்சுளாபவுனும்** ஒரே இடத்தில்.

5635 Finch Ave. East, Unit 3
(Finch and Tapscott), Scarborough. Ont.,
M1B 5K9, Canada

☎: (416) 299-1343

# நல்லதே நடக்கும் என நினை

- பொன் குலேந்திரன்

நாம் செய்யும் கருமவினைகளின் பிரதிபலனையே நாம் வாழ்வில் அனுபவிக்கின்றோம். தினை விதைத்தவன் 'தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்.'

எமது மனதிலே உயர்வான எண்ணங்கள் ஏற்படும் பொழுது வாழ்வும் உயர்வானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் இருக்கும். எதிர்மறையாக தாழ்வான தீய எண்ணங்கள் எமது மனதிலே ஏற்படும் பொழுது வாழ்விலும் துன்பமும் பயமும் கவலையும் குடிகொள்ளும். எனவே நாம் உயர்வான, இன்பகரமான சிந்தனைகளை மனதிலே ஏற்படுத்தி அவற்றை செயற்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் நாம் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சில நோக்கங்களை, இலக்குகளை அடைய சில ஆக்க சிந்தனைகளை ஏற்படுத்தலாம். பின் அதனை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் பலாபலன்கள் எமக்கு அதில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும். நாளடைவிலே அதுவே நாம் சிந்திக்கும் முறையாக அமைந்து விடும்.

சிந்திப்பவன் மனிதன். இந்த அருமையான சக்தியைக் கொண்டு மனிதன் கற்பனை வானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கின்றான். அவனுடைய க[illegible]னைகள், சிந்தனைகள் மனதிலே எண்ணத் தோற்றமாக உதயம் பெற்று செயல் வடிவம் பெறுகின்றன. இவ்வாறான ஆக்க பூர்வமான எண்ணத் தோற்றங்கள் இயல்பானவை. எமக்குத் தெரிந்தோ தெரியாமலோ இடைவிடாது எமது மனதிலே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதுவே இப்பிரபஞ்சத்தின் ஆக்க வழி முறையும் கூட.

ஒருவனுடைய சிந்திக்கும் திறனே அவனுடைய வாழ்வையும் நிர்ணயிக்கும், வாழ்வியல் உயர்ந்த புனித நோக்கம் உடையது. இதை எம்மில் பலர் அறிந்து கொள்வதில்லை. இதனால் அவர்கள் எப்பொழுதும் தாழ்வான சிந்தனைகளான பயம், பீதி, பாதுகாப்பின்மை போன்றவற்றையே எண்ணித் தம்மை மாய்த்துக் கொள்கிறார்கள். இவற்றை யாரும் நமக்குத் தந்தவையல்ல. நாமாக வலிந்து பெற்றுக் கொள்பவை. ஆனால் ஒருவன் உயர்வான ஆக்க பூர்வ சிந்தனையில் ஈடுபடும் பொழுது அவன் எந்த ஒரு சவாலையும் சமாளிக்கக் கூடியனவாகவும் மனதிலே எப்பொழுதும் உடன்பட்ட மகிழ்ச்சி, வெற்றி, அமைதி, பாதுகாப்பு போன்ற திருப்திகளோடு வாழ்பவனாக இருப்பதை நாம் காண்கிறோம். மனதின் நிறைவே வாழ்வின் நிறைவு. நவீன தொழில்நுட்பங்கள் வாழ்வியலை பெரிதும் மாற்றிவிட்டது. தேவைகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. பொருளாதார நிலை நிச்சயமற்ற தன்மையுள்ளதாகி விட்டது. இதனால் மனிதன் எப்பொழுதும் எதுவும் நடக்கலாம் என்ற ஓர் எதிர்மறைவான சிந்தனையோடு என்றும் வாழ வேண்டியுள்ளது. இவற்றிலே இருந்து விடுபட்டு எமது மனதை தைரியப்படுத்தி மகிழ்ச்சியாக வாழ என்ன செய்யலாம்.

ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். நீங்கள் வேலை செய்யும் இடத்திலே உங்கள் மேலதிகாரிக்கும் உங்களுக்கும் ஓர் உடன்பாடற்ற நிலை ஏற்ப[illegible]டுள்ளது. இதனால் ஒரு சிநேகபூர்வமான சூழலில் வேலை செய்ய மு[illegible]த நிலையோடு உங்களை வேலையில் இருந்து நீக்கி விடுவார்களோ என்ற ஒரு பயம். வேலை பறிபோனால் வீட்டு அடமானக்கடன், வாகனக்கடன், பிள்ளைகளின் தேவைகள் போன்றவற்றிற்கு எங்கே போவேன் என்றெல்லாம் இரவும் பகலும் சிந்தித்து மனதைக் குழப்பிக கொண்டிருப்பீர்கள். இன்று இது சாதாரண நிகழ்வாகி விட்டது.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் நாம் நமது எண்ணப் போக்கை மாற்றி இயல்பான அமைதிச் சிந்தனையை ஏற்படுத்த வேண்டும். ஓர் அமைதியான தியான சிந்தனையில் அமர்ந்து மேலதிகாரியுடன் சிநேகபூர்வமான உறவு ஏற்பட்டு நீதியானதும் அமைதியானதுமான ஏற்புடைச் சூழல் தோன்றும் ஒரு எண்ணத் தோற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இது நடக்கக் கூடியதொன்று என்றும் இப்போது நடைபெறுகின்றது என்றும் எண்ணுங்கள்.

இத் தியானச் சிந்தனையை ஒரு நாளில் பல தடவைகள் செய்யுங்கள். மேலதிகாரி பற்றிய எண்ணங்கள் வரும்போதும் செய்யுங்கள். எமது ஆசைகளும் தேவைகளும் உண்மையானவையாகவும் நேர்மையானவையாகவும் இருக்கும் பொழுது ஏற்றுக் கொள்ளும் ஒரு மனப்பான்மையும் சேர்ந்து போகும் தன்மையும் அதிகாரியிடம் ஏற்படுவது தோன்றும். இறுதியில் பிரச்சினைகள் முழுவதும் நீங்கி இரு பகுதியினரும் நன்மையடையக் காண்போம்.

மேலதிகாரியினுடைய நடத்தையை மாற்றுவதாகவோ அன்றி அவருடைய விருப்பத்திற்கு மாறாக நடக்க வைக்கவோ இந்நுட்பத்தை உபயோகிக்க முடியாது என்பதை நாமறிய வேண்டும். எமது அறிவையும் அனுபவத்தையும் விருத்தி செய்யவும் திறந்த மனத்தோடும் உறுதியான மனத்தோடும் ஒரு புது வழியை முயற்சிக்கவும் இது தூண்ட வேண்டும்.

இந்[illegible] ஆக்கத்தோற்ற எண்ணங்கள் எப்படி வேலை செய்கின்றது?
வா[illegible]க நிலையில்லாதது என்ற சமயத் தத்துவத்தை உண்மையை இன்று விஞ்ஞானிகளும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இவ்வெண்ணக் கருவை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றார்கள். நாம் வாழும் இப் பௌதீக உலகம் ஒரு சக்தியின் வெளிப்பாடே. வெறும் சடப்பொருளாலான ஒன்றல்ல. நமக்கு என ஒரு வடிவம் இருந்தாலும் நாமும் ஒரு சக்தியின் வடிவமே. நாமும் எம்மைச் சூழ உள்ளனவும் சக்தியினால் ஆனவையே. அவை வெவ்வேறு அளவிலான சக்தியை அதிர்வலைகள் மூலம் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. அத்தோடு இவற்றில் சில மென்மைத் தன்மையும் சில கடினத்தன்மையும் உடையனவாக உள்ளன. எண்ணக் கருக்கள் இலகுவானவையும் மாறக் கூடியவையும் ஆகும். பௌதீகப் பொருட்களோ கடினத் தன்மையும் இறுக்கமான பிணைப்பையும் உடையவை. அதனால் மந்த மாற்ற முடையவை. தமக்குள்ளே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொள்வன. மனித சரீரம் மென்மையானது. இரசாயனத் தாக்கங்களுக்கு இலகுவில் மாற்றம் பெறும் தன்மையானது. ஒரு கல் கடினமானது மந்தகதி மாற்ற முடையது. ஆனாலும் மெல்லெனப்பாயும் நீர் அதனை மாற்றமடைய வைக்கின்றன. எல்லா வகை சக்திகளும் ஒன்றுடனொன்று தொடர்புடையனவும் தாக்கம் ஏற்படுத்துவனவும் பின் மின் சக்தியாக இரசாயனசக்தியாக வெப்பசக்தியாக மாற்றமடைகின்றன.

**சொந்த அனுபவம்**
சில மாதங்களுக்கு முன் எனக்கு இருதயத்தில் சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இருதய சம்பந்தப்பட்ட சிகிச்சை என்றவுடன் உயில் எழுதி வைக்க வேண்டியது தான் என்பது எம்மிடையே பலர் நோக்கு. பலருக்கு பயத்தினாலும் யோசனையாலும் இரத்த அழுத்தம் கூடிவிடும். சத்திரசிகிச்சைக்கு முதல் நாள் இரவு தூக்கமே வராது. ஆனால் என் மனநிலை வேறாக இருந்தது. சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடந்தேறும் என்ற நம்பிக்கை இளம் வயதுடைய பங்களா தேசத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணரைச் சந்தித்தவுடன் எனக்குப் பூரணமாக ஏற்பட்டது. அவரின் புன்முறுவலும் அமைதியான தன்னம்பிக்கையுள்ள பேச்சும் என் நம்பிக்கை உரம் ஏற்றியது. சத்திரசிகிச்சைக்கு பின் ஐ.கி.யூ வில் இருந்த நான் இருமணி நேரத்துக்குள் சுயநினைவு பெற்று கதைக்கத் தொடங்கியது எல்லோருக்கும் ஆச்சரியத்தை கொடுத்தது. அதுவுமன்றி மறு நாளே நானாக எழும்பி நின்று சில அடிகள் எடுத்து வைக்கக் கூடிய நிலை எனக்கு ஏற்பட்டது. ஐந்து தினங்கள் மட்டுமே வைத்தியசாலையில் இருந்த நான் வீடு திரும்பி இரண்டு கிழமையில் என கொம்பியூட்டரில் கட்டுரைகள் பத்திரிகைகளுக்கு எழுதத் தொடங்கினேன். தூய, அழுக்கற்ற மனமும் என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையுமே எனக்கு ஊன்றுகோலாக இருந்தன. வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு இவை மிக முக்கியம்.

**சக்தி காந்த சக்தியுடையது**
ஒரே தன்மையுடைய அல்லது ஒரே அதிர்வெண்களையுடைய சக்திகள் ஒன்றையொன்று கவரும் என்பது சக்தி பற்றிய ஒரு கோட்பாடாகும். இது பரிவு எனப்படும். சக்தியோ அல்லது அதிர்வெண்களின் அதிர்வலைகளோ ஒரே நேரத்தில் செயற்படும் பொழுது பரிவு ஏற்படுகின்றது. எண்ணக் கருத்துகளும் உணர்வுகளும் தத்தமக்குரிய காந்த சக்திகளை உடையனவாக உள்ளன. அவை தம்மோடு ஒத்த தன்மையுடைய சக்தியுடையனவற்றைக் கவர்ந்து ஈர்த்து சேர்ந்து போகும் தன்மையுடையன. இவ்வொழுங்கு வாழ்க்கை நடைமுறையில் நடைபெறுவதை காண்கிறோம். நான் தேடிக் கொண்டிருக்கும் புத்தகத்தை எனது நண்பனும் தேடிக்கொண்டிருப்பது அல்லது எடுத்து வைத்திருப்பது இதற்கு ஓர் உதாரணமாகும்.

சிந்தனை ஒரு விரைவானதும் அசையும் தன்மையும் கொண்ட சக்தி. ஒன்றை நாம் ஆக்க முற்படும் பொழுது முதல் அதைப் பற்றி சிந்திக்கின்றோம். உதாரணத்திற்கு வங்கியில் நாம் பணம் போட வேண்டுமானால் முதல் அதைப்பற்றி மனதிலே சிந்திக்கின்றோம். பிறகு வங்கிக்குச் சென்று உரிய படிவங்களை பெற்று பணத்தைப் போடும் நடைமுறைச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றோம். எனவே ஒரு செயற்பாட்டின் முன் மனதிலே ஓர் எண்ணத் தோற்றம் ஏற்படுகின்றது. எம் மனதிலே ஏற்படும் எண்ணத் தோற்றங்களே செயல் வடிவு பெற முயற்சிக்கின்றன. எனவே எப்பொழுதும் துன்பங்கள் பற்றியே எண்ணிக் கொண்டிருப்போமானல் வாழ்விலே துன்பங்களே நேரும். இன்பங்கள் பற்றியே எண்ணுவோமானால் என்றும் இன்பமே நிகழக் காணலாம்.

Ref: Creative Visualization - Sahthi Gowan


# கலைமகள் புத்தக நிலையம்

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- *CREDIT LEVEL* தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# JEY JEY WELDING

- வீட்டுத் தேவைகளிற்கான சகலவிதமான **Grill** வேலைகளும்
- **Swimming Guard Rails**
- **Fencing**
- **Safety Grills for Store**
- **BSMT Safety Grills**
- **Welding** சம்பந்தமான வேலைகள்
- கோயிலிற்கு தேவையா **Grill** வேலைகள்

அனைத்து வேலைகளிக்கும் அழையுங்கள்: **416 439 - 7159**

# விளையாட்டுத் தகவல்கள் (86)

"எஸ். கணேஷ்



## ஸ்ரீலங்கா Vs கனடா (World Cup) கிரிகெட் செய்திகள்

கிரிகெட் (World Cup) உலக கிண்ணத்திற்கான போட்டிகள் 2003ஆம் ஆண்டு South Africa நாட்டில் நடைபெற இருப்பது யாவரும் அறிந்ததே. இப்போட்டிகள் பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி தொடங்கி மார்ச் மாதம் 23ஆம் திகதி இறுதியாட்டம் South Africa இன் Jo Hannesburg நகரில் நடைபெற இருக்கிறது. 54 ஆட்டங்கள் 43 நாட்களில் நடைபெற இருக்கின்றது. இதுவரை காலமும் நடைபெற்ற உலககிண்ண போட்டிகளில் இதுவே பெரிய உலக கிண்ணப் போட்டிகள் என வர்ணிக்கப்படுகின்றது. 14 நாடுகள் இப்போட்டியில் மோத இருக்கின்றன. 1999ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் இறுதியாக நடைபெற்ற உலககிண்ணப் போட்டிகளில் 12 நாடுகள் கலந்து கொண்டன. சவுத் ஆபிரிக்கா நாட்டில் 2003ஆம் ஆண்டு ஆரம்பமாகும் போட்டிகளில் 2 நாடுகள் கூடுதலாக கலந்து கொள்கின்றன.

இவ்வருடம் கனடாவில் நடைபெற்ற தேர்வு போட்டிகளில் தமிழ் வீரனான சஞ்சய் துரைசிங்கம் அவர்களின் திறமையான பந்து வீச்சினால் கனடா அணியும் 2003ஆம் ஆண்டு World Cup க்கு தெரிவானது. கனடா வெற்றி கொண்ட போது 'உலக தமிழோசை' பத்திரிகையில் நான் எழுதியிருந்தேன், கிரிகெட் தமிழ் இரசிகர்களின் ஒரு புதிய ஆசை கனடாவும் ஸ்ரீலங்காவும் ஒரே Group இல் வர வேண்டும். தமிழ் வீரன் சஞ்சய் கனடா சார்பாகவும் தமிழ் வீரன் முரளிதரன் ஸ்ரீலங்கா சார்பாகவும் பந்து வீச வேண்டும். இதையெல்லாம் நாம் பார்த்து இரசிக்கும் ஒரு சந்தர்ப்பம் வருமா என்று கேட்டு எழுதியிருந்தேன்.

இந்த அதிர்ஷ்டம் தமிழ் கிரிகெட் ரசிகர்களுக்கு கிட்டியிருக்கின்றது. கடந்த (Oct. 27ஆம் திகதி) சர்வதேச கிரிக்கெட் சபை World Cup சுற்றுக்கான Pool தெரிவுகளை அறிவித்துள்ளது. இதில் இரசிகர்கள் எல்லோரும் எதிர்பார்த்தது போல் கனடாவும் ஸ்ரீலங்காவும் 'Group B' அணியில் இடம் பெற்றுள்ளன. பெப்ரவரி 19ஆம் திகதி 2003ஆம் ஆண்டு கனடாவும் ஸ்ரீலங்காவும் மோதுவதன் மூலம் இரசிகர்களின் கனவு நிஜமாக உள்ளது.

இரு தேர்வு Group அணிகளையும் இங்கு பார்ப்போம்.

2003 World Cup Cricket

| Group A | Group B |
|---|---|
| Australia | South Africa |
| Pakistan | Srilanka |
| India | Canada |
| England | New Zealand |
| Holland | West Indies |
| Namibia | Kenya |
| | Bangladesh |

அடுத்து இப்போது விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்த Standard Bank Cup ஆட்டங்களின் விபரங்களையும் நடைபெற்று கொண்டிருக்கும் Sharjah Cup ஆட்டங்களையும் பற்றிய விபரங்களை இங்கு பார்ப்போம்.

ஒக்ரோபர் 5ஆம் திகதி தொடங்கிய Standard Bank Cup ஒக்டோபர் 26ஆம் திகதி இறுதியாட்டத்துடன் முடிவுற்றுள்ளது. இதில் சவுத்ஆபிரிக்கா, இந்தியா, கென்யா ஆகிய மூன்று நாடுகள் மோதின. இறுதியாட்டத்தில் இந்தியாவும் சவுத்ஆபிரிக்காவும் மோதின. இதில் முக்கியமாக 6வது ஆட்டத்தில் கென்யா இந்தியாவை 70 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இறுதிப் போட்டிக்கு சவுத் ஆபிரிக்கா ஏற்கனவே தகுதி பெற்ற நிலையில் 9வது ஆட்டம் இந்தியாவா அல்லது கென்யாவா சவுத் ஆபிரிக்காவுடன் மோதும் என்ற எதிர்பார்ப்பில் 9 வது ஆட்டம் தொடங்கப்பட்டது. இதில் இந்தியா 186 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இதில் முக்கியமாக கங்குலியும் சச்சினும் சேர்ந்து முதல் விக்கெட்டுக்குரிய இணைப்பு ஆட்டத்தில் சாதனை புரிந்துள்ளனர். இருவரும் சேர்ந்து முதல் விக்கெட்டுக்கு 258 ஓட்டங்கள் எடுத்து இதற்கு முந்தைய சாதனையான 252 ஓட்டங்களை, இதே ஜோடியான இருவரும் 1997 - 1998 ஆண்டு ஸ்ரீலங்காவிற்கு எதிராக சாதனையை முறியடித்து உள்ளனர். நடந்து முடிந்த ஆட்டங்களின் விபரங்களை பார்ப்போம்.

**முதலாவது ஆட்டம் October 5, 2001**
இந்தியா:- 50 ஓவர், 5 விக்கெட், 279 ஓட்டங்கள் (கங்குலி 127, சச்சின் 101)
சவுத்ஆபிரிக்கா:- 48.2 ஓவர்கள் 4 விக்கெட் 280 ஓட்டங்கள் (Kristen 133, Gibbs 48)
சவுத்ஆபிரிக்கா 6 விக்கெட்டுகளால் வெற்றி.

**இரண்டாவது ஆட்டம் October 5, 2001 சவுத் ஆபிரிக்கா Vs கென்யா**
கென்யா:- 50 ஓவர் 7 விக்கெட் 159 ஓட்டங்கள். சவுத் ஆபிரிக்கா:- 33.4 ஓவர் 3 விக்கெட் 160 ஓட்டங்கள். சவுத் ஆபிரிக்கா 7 விக்கெட்டுகளால் வெற்றி.

**மூன்றாவது ஆட்டம் October 10, 2001 சவுத் ஆபிரிக்கா Vs இந்தியா**
இந்தியா:- 48.5 ஓவர் Allout 233 ஓட்டங்கள். சவுத் ஆபிரிக்கா:- 46.2 ஓவர் Allout 192 ஓட்டங்கள். இந்தியா 41 ஓட்டங்களால் வெற்றி.


# Moka Market

**Brampton, Mississauga மக்களுக்கு ஓர் இனிய செய்தி**




உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள், இறைச்சி, மீன் வகைகள், பத்திரிகைகள், தமிழ் வீடியோ, **CD** கசட்டுகள போன்ற தேவைகளுக்கு உங்களுக்கு மிக அருகிலேயே சேவை செய்ய வந்துள்ளது Moka Market.



விலையோ மலிவு
தரமோ உயர்வு

ஒருமுறை வந்து பாருங்கள் உண்மையை உணர்வீர்கள்

**MOKA MARKET**
**900 Rathburn Rd. #5 & 6**
**Mississauga**
**தொலைபேசி: 905 273-4137**





**நான்காவது ஆட்டம் October 12, 2001 இந்தியா Vs கென்யா**
கென்யா:- 37.1 ஓவர் Allout 90 ஓட்டங்கள். இந்தியா:- 11.3 ஓவர் 0 விக்கெட் 91 ஓட்டங்கள். இந்தியா 10 விக்கெட்டுக்களால் வெற்றி.

**ஐந்தாவது ஆட்டம் October 14, 2001 சவுத் ஆபிரிக்கா Vs கென்னியா**
கென்னியா:- 50 ஓவர் 7 விக்கெட் 229 ஓட்டங்கள். சவுத் ஆபிரிக்கா:- 41.1 ஓவர் 1 விக்கெட் 230 ஓட்டங்கள். சவுத் ஆபிரிக்கா 9 விக்கெட்டுகளால் வெற்றி.

**ஆறாவது ஆட்டம் October 17, 2001 கென்யா Vs இந்தியா**
கென்யா:- 50 ஓவர் 6 விக்கெட் 246 ஓட்டங்கள். இந்தியா:- 46.4 ஓவர் Allout, விக்கெட் 176 ஓட்டங்கள். கென்யா 70 ஓட்டங்களால் வெற்றி.

**ஏழாவது ஆட்டம் October 19, 2001 சவுத் ஆபிரிக்கா Vs இந்தியா**
சவுத் ஆபிரிக்கா:- 50 ஓவர் 4 விக்கெட் 282 ஓட்டங்கள். இந்தியா:- 44.4 ஓவர் Allout 236 ஓட்டங்கள். சவுத் ஆபிரிக்க 46 ஓட்டங்களால் வெற்றி.

**எட்டாவது ஆட்டம் October 22, 2001 கென்னியா Vs சவுத் ஆபிரிக்கா**
சவுத் ஆபிரிக்கா:- 50 ஓவர் 3 விக்கெட் 354 ஓட்டங்கள். கென்னியா:- 45.3 ஓவர் Allout 146 ஓட்டங்கள். சவுத் ஆபிரிக்கா 208 விக்கெட்டுகளால் வெற்றி.

**ஒன்பதாவது ஆட்டம் October 24, 2001 இந்தியா Vs கென்யா**
கென்யா:- 50 ஓவர் 5 விக்கெட் 165 ஓட்டங்கள். இந்தியா:- 50 ஓவர் 3 விக்கெட் 351 ஓட்டங்கள். இந்தியா 186 ஓட்டங்களால் வெற்றி.

**இறுதியாட்டம் October 26, 2001 சவுத் ஆபிரிக்கா Vs இந்தியா**
முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் திராவிட் மட்டுமே 77 ஓட்டங்களை பெற்றார். பலத்த எதிர்பாப்புகளிடன் களம் இறங்கிய இந்தியா அணி இப்படியாக புஷ்வானம் ஆகியது கவலைக்குரியதே! மிகவும் இலகுவான இலக்கான 183 ஓட்டங்களை சவுத் ஆபிரிக்க அணி 42.1 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 187 ஓட்டங்களை வென்றதன் மூலம் Standard Bank Cup வெற்றி கிண்ணத்தை சவுத் ஆபிரிக்கா. 6 விக்கெட்டுகளில் இந்திய அணியை தோற்கடித்து கைப்பெற்றியது. இத்தொடரில் மிகவும் திறமையாக விளையாடிய இந்திய அணி இறுதியாட்டத்தில் இப்படிக் கோட்டை விட்டது இரசிகர்கள் மனதில் அதிதிருப்தியை உண்டாக்கியுள்ளது.

அடுத்து ஸ்ரீலங்கா, பாகிஸ்தான், சிம்பாவே அணிகள் மோதும் உலகில் மிகவும் பணப் பரிசுதொகைகள் வழங்கப்படும் சாஜா Cup போட்டிகளின் விபரங்களை இங்கு பார்ப்போம். கடந்த இரண்டு வருடங்களாக (1999, 2000) சாஜா Cupஐ வென்ற ஸ்ரீலங்கா அணி இவ் வருடமும் வென்று Hat - Trickஐ ஏற்படுத்துமா என பொறுத்திருந்து பார்ப்போம். October 26ஆம் திகதி தொடங்கிய சாஜா கிண்ணப் போட்டிகள் நவம்பர் 4ஆம் திகதி இறுதியாட்டத்துடன் முடிவடையும்.

**1st ஆட்டம் ஸ்ரீலங்கா Vs சிம்பாவே October 26, 2001**
முதலில் களம் இறங்கிய ஸ்ரீலங்கா அணி 50 ஓவர்கள் 6 விக்கெட் நஷ்டத்திற்கு 256 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் அத்தப்பத்து 92, தமிழ் வீரனான றசல் ஆனோல்ட் 76 ஓட்டங்களை பெற்றனர். அடுத்து துடுப்பெடுத்தாடிய [illegible] 50 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 193 ஓட்டங்கள். இதில் முதன் முதலில் ஸ்ரீலங்கா சார்பில் அறிமுகப்படுத்தப்பட்ட பெர்னாடோ விக்கெட்டுகளையும் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 4 மேடின் ஓவர்கள் போட்டு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார். ஸ்ரீலங்கா அணி 63 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

**2வது ஆட்டம் ஸ்ரீலங்கா Vs பாகிஸ்தான் October 27, 2001**
முதலில் களம் இறங்கிய பாகிஸ்தான் அணி 46.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 176 ஓட்டங்கள். அடுத்து களம் இறங்கிய ஸ்ரீலங்கா அணி 38.1 ஓவர்களில் 3 விக்கெட்டிகளை மட்டுமே இழந்து 17 ஓட்டங்களை பெற்று 7 விக்கெட்டுகளால் வெற்றி ஈட்டியுள்ளது. இதில் குணவர்த்தனா 88 ஓட்டங்களை பெற்றார்.

சாஜா கிண்ணத்தைப் பற்றிய மேலதிக விபரங்களுடன் அடுத்த இதழில் சந்திப்போம். 'நன்றி'

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

—தொகுப்பு - பரம்

*1985ஆம் ஆண்டு வெளிவந்த படங்கள்*

**காக்கிச் சட்டை:-** இப் படத்தை சத்தியா மூவிஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. கமலஹாசன், ராஜீவ், அம்பிகா, மாதவி, விஜயா ஆகிய நடிகர்கள் நடித்துள்ளனர். வசனம் ஏ. எல். நராயணன். கவிஞர் வாலி, புதுமைப் பித்தன், முத்துலிங்கம், நா. காமராஜன், அவினாசிமணி ஆகியோர் பாடல்கள் எழுதியுள்ளனர். இப் படத்திற்கு இளையராஜா இசையமைத்துள்ளார். இப் படத்தை ராஜசேகர் இயக்கியுள்ளார்.

ராஜீவ்



காவல்துறையில் சேர்ந்து அதிகாரியாகப் பணி புரிய வேண்டுமென்ற ஆவல் கதாநாயகனுக்கு ஏற்படுகிறது. ஆனால் அந்த வாய்ப்பு அவனுக்கு கிட்டவில்லை. எனவே அவன் காவல் அதிகாரி உடை அணிந்து கடத்தல்காரர்களை வேட்டையாடிப் பிடிக்கிறான். அதற்காக அவர்கள் கூட்டத்திலே சேர்கிறான். அவன் யார் என்பது கடைசி வரை மர்மமாகவே இருக்கிறது. காதல், மோதல், என்று காட்சிகள் விறுவிறுப்பாக உள்ளன.

கமலஹாசன் திறம்பட நடித்திருக்கிறார். சத்தியராஜும் இரசிகர்களைக் கவர்கிறார். அம்பிகா மாதவியும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். இனிமையான இசைக்கு, இளையராஜா 'வானிலே தேனிலா ஆடுதே பாடுதே' என்ற நா. நாமகராசன் பாடல் குறிப்பிடத்தக்கதாய் அமைந்திருந்தது. மற்றையோரின் பாடல்களும் இனிமையாக ஒலித்தன. திறமையான டைரக்ஷனுக்கு ராஜசேகர்.

**சின்ன வீடு:-** இப் படத்தில் பாக்கியராஜ், ஜெய்கணேஷ், கல்பனா, கோவை சரளா மற்றும் பலர் நடித்துள்ளனர். இசை இளையராஜா, கதை, வசனம் டைரக்ஷன் கே. பாக்கியராஜ்.



*பாக்யராஜ்*

ஒருவன் தான் நினைத்ததற்கு மாறாக பருமனான உடல்வாகு கொண்ட பெண் ஒருத்தியை திருமணம் செய்ய நேரிடுகிறது. அதன் விளைவாக அவன் உள்ளத்தில் எழும் ஆபாசங்களும் அதனால் நேரிடும் சங்கடங்களும் அவனை ஆட்டிப் படைக்கின்றன. இதிலிருந்து விடுபடுவதற்காக 'சின்ன வீடு' ஒன்று அமைத்துக் கொள்கிறான். அந்த சின்ன வீடு கற்றுக் கொடுத்த படிப்பினையால் திருந்துகிறான்; மனைவியே உயர்ந்தவள் என உணர்கிறான்.

இந்தச் சிறிய கதையை நகைச்சுவை வசனங்களுடனும், உணர்ச்சிகரமான வசனங்களுடனும் தனது நடிப்பினால் தனது இரசிகர்களை கவர்கிறார் பாக்கியராஜ். கல்பனாவும் திறம்பட நடித்துள்ளார். நகைச்சுவை நடிகை கோவை சரளாவின் நடிப்பும் மிகப் பிரமாதமாக உள்ளது. நகைச் சுவை வாயிலாக நல்லதொரு கருத்தை எடுத்துச் சொல்லிய வெற்றிப் படமாகும்

**நட்சத்திரங்களின் முதல் படம்**

- ஸ்ரீதேவி--துணைவன்(பேபி), மூன்றுமுடிச்சு
- மஞ்சுளா--சாந்தி நிலையம், ரிக்ஷாகாரன்
- லதா--உலகம் சுற்றும் வாலிபன்
- சரிதா--தப்புத் தாளங்கள்





**VIMAC HOME RENOVATIONS**

SPECIALIZING IN INSTALLATION OF
- KITCHEN CABINETS
- COUNTER TOPS
- SPACE MAKING CABINETS
- BATHROOM /LAUNDRY UNITS

FREE ESTIMATE

& GENERAL HOME RENOVATION

CONTACT : VIC AT BUSINESS: 416 266 6566
416 266 7227

REPLACE YOUR COUNTER TOPS & SINK AT REASONABLE RATES



# தூறல்

## மணிரத்னமும் அவசர அலசலும்

அண்மையில் பத்திரிகைகளில் அடிபட்ட செய்தி ஒன்று 'மணிரத்தினம் இலங்கைப் பிரச்சனை பற்றிய படமொன்றை எடுக்கின்றார்" என்பது. மணிரத்தினம் ஏற்கனவே 'றோஜா', 'பம்பாய்', 'உயிரே உயிரே', 'இருவர்' என அரசியல் படங்களை இயக்கியவர். இவ் வரிசையில் மீண்டும் ஒரு படம்.

K. பாலசச்சந்தரின் 'புன்னகை மன்னன்' கமலஹாசனின் 'தெனாலி', பாலாவின் 'நந்தா', சந்தோஷ்சிவனின் 'ரெரறிஸ்ட்' என இலங்கைப் பிரச்சனை பற்றிய படங்கள் தொடர்கின்றன. K. பாலச்சந்தர் வழமை போல் குழப்பிவிட்டார். பின்னர் 'சென்சார் வெட்டிவிட்டார்கள்' என நியாயம் தந்தார். சென்சாரின் வெட்டால் கருத்தியல் ரீதியாக திரைப்படம் பாதிக்கப்படுமாயின், அப் படத்தை ஏன் வெளியிடுகிறார்கள்? தெனாலி - இலங்கைத் தமிழ் பேசி (யாழ்ப்பாணத்) வியாபரமாக்கப்பட்ட படம். எமது மக்கள் பட்ட அவலங்கள் கொச்சைத்தனமாக, நகைச்சுவையாக்கப்பட்டுள்ளது. 'நந்தா' இன்னமும் வெளிவரவில்லை. ரெரறிஸ்ட் - இக்கு பயங்கரவாதியே சந்தோஷ் சிவன் தான். சின்னத்திரையில் 'துருப்பிடித்த மனசு' என்னும் சிறு தொடரில் எமது துயரங்கள் அழுத்தமாக ஒரு சில காட்சிகளில் காட்டப்பட்டுள்ளமை இங்கு குறிப்படத்தக்கது.



மணிரத் தினத் தின் அரசியல் படங்கள் வசூலை அள்ளிக் கொட்டுகின்றன. எனவே அவர் அதில் கவனம் காட்டுகிறார். மணிரத்தினம் M.B.A பட்டதாரி. G.V. எனப்படும் பிரபல தயாரிப்பாளர் இவரது அண்ணன். சுகாசினி - இவரது மனைவி - சாருகாசன் - இந்தியாவின் சிறந்த நடிகர் விருதைப் பெற்றவர். இவரது மாமனார் இவரது தம்பி கமலஹாசன் சிறந்த புத்திஜிவீ நடிகர் / இயக்குனர். பரந்த குடும்பப் பின்னனி கொண்ட மணிரத்தினம் கலைப் படங்களுக்கும் வெகுசனப் படங்களுக்கும் இடையே பாலம் அமைப்பவர் என்ற கருத்து பரவலாக்கப்பட்டுள்ளது. புத்திசாலித்தனமும் நிர்வாகத்திறனும் வணிக வளம் கொண்ட மூளையும் அமையப் பெற்ற கதாசிரியர், இயக்குனர் - மணிரத்தினம்.

**றோஜா Roja**

காதலை மையமாகக் கொண்டு காஷ்மீர் பிரச்சனை தூவி விடப்பட்டுள்ளது. பார்வையாளர்கள் - தமிழ் நாட்டு மக்கள். இங்கு கரு - காதல். அதனைச் சுற்றியுள்ளவை - காஷ்மீர் பிரச்சனைகள் - காஷ்மீர் பிரச்சனை வெறும் சம்பவங்களே. அதுவும் செய்தி வடிவிலேயே கூறப்பட்டுள்ளது. காஷ்மீர் தலைவன் கொடும் கொலைகாரன் போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. இங்கு பார்வையாளர்களாக உள்ள தமிழ்நாட்டு மக்களுக்கு, காஷ்மீர் பிரச்சனையை விட, இலங்கைப் பிரச்சனையே அதிகம் தெரியும். அவர்களது உள்ளகக் காட்சிகளை இலங்கைச் சம்பவங்களுடனேயே பொருத்திப் பார்க்கும் விளைவு எமக்கு எதிரானது? காஷ்மீரில் என்னதான் நடக்கிறது. உங்களுக்குத் தெரியுமா மணிரத்தினம்?



பம்பாய்

இதுவும் முஸ்லீம் பெண் இந்து ஆணிற்கு இடையிலான காதல் - கற்பனை- பம்பாய் கலவரம் செய்திகள் - இந்து ஆணின் வீர வசனங்கள் - மசலாச் சினிமா. காதலுக்கு மதம் தடை என்பது போன்ற போலித்தனத்தை வளர்த்து அதனூடாகவும் சிறந்த படப்பிடிப்பினூடாகவும் மக்களை கவர்வதே நோக்கம். கற்பனைக்கும் சம்பவங்களுக்கும் இடையில் தொடர்புகள் இருக்க வேண்டும். வெற்றிடமாக இருக்கக் கூடாது.


**இருவர்**

ஊருக்கு நன்மை செய்ய விரும்பின், கொலை செய்யலாம் கொள்ளை அடிக்கலாம். அதற்கு தண்டனை உண்டு. ஆனால் பாவமில்லை என நாயகனில் கருத்துக் கூறிய மணிரத்தினம். அக வெளியும் புற வெளியும நேர் கோட்டில் இருக்க வேண்டும் என விமர்சிக்கிறார். மேற்கத்திய நாடுகளில் அரசியல்வாதிகள் அக வாழ்க்கையில் தூய்மையானவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல் தூக்கி எறியப்படுவார்கள். ஆனால் எமது நாடுகளில் இரண்டாவது மனைவியை வைத்திருப்பது அந்தஸ்து ஆக கருதப்படுகிறது. ஆனந்தன் (நடிகர்) தமிழ்ச்செல்வம் (கவிஞர்) ஆகியோர் அரசியலுக்கு வருகின்றனர். அவர்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் மோசமானவர்கள் என விமர்சிக்கிறார். படம் பார்க்கும் பொழுது M.G.R., கருணாநிதி, ஜெயலலிதா, R.M. வீரப்பன் போன்றோர் நினைவுக்கு வருகின்றனர். திராவிட இயக்க கட்சிகள் பற்றிய விமர்சனத்துக்குப் பதிலாக தனிப்பட்டவர்கள் விமர்சிக்கப்படுகின்றனர். கருத்தியல் ரீதியாக மிகவும் பலவீனமான படமிது. இங்கு செய்திகள் - சம்பவங்களாக்கப்படுகிறது.


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா

- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய இழப்பீடுகள்
- மற்றைய இழப்பீடுகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள



**Accident & Traffic Ticket**

**(13 Years Insurance Claims Experience)**

**Tel: (416) 245-6555**
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

**Tel: (416) 755-2801**
2390 Eglinton Ave. E.
Suite 223, Scar., Ont.


பொதுவாகவே இவரது படங்கள் புனைவுக்கும், நிகழ்வுக்குமிடையே உறவுகளற்று காணப்படுகின்றன. நிகழ்வுகளின் கவர்ச்சித் தன்மை, புனைவுடன் சேர்ந்து பார்வையாளனைச் சென்றடைகிறது. பார்வையாளனின் அறிவியல் தன்மையானது இந்தப் புனைவுடன் ஒன்றிவிடுகிறது. இந்தத் தளத்தில் வேகமாக இயங்குகிறார் மணிரத்தினம். புனைவு, நிகழ்வை மீறிக் காணப்படும் பார்வையாளன் நிகழ்வை விட புனைவிலேயே உள்வாங்கப்படுகிறான். செய்திகள் + காதல் = மணிரத்தினத்தின் திரைப்படம். செய்திகள் - இவரது பார்வையில் இவருக்கு சாதகமானவையே கூறப்படுகின்றன.

Olever Stone தனது El Salvador என்னும் திரைப்படத்தில் அமெரிக்கத் தலையீடுகள் பற்றி விமர்சித்துள்ளார். அதே போல் போராளிகளுக்கிடையிலான கொலைகளையும் விமர்சித்துள்ளார். அதே போல JFK, நிக்சன் போன்ற படங்களும் தெளிவான கதையோட்டமும் நேரடி விமர்சனங்களும் கொண்ட திரைப்படங்கள். இதை விட Hidden Agenda - தான் தோன்றத்தனமாக, பிரிட்டிஷ் அரசால் சுட்டுக் கொல்லப்பட்ட IRA போராளிகள் சார்பாக விமர்சிக்கப்பட்டுள்ளது. Casualties of War என்னும் படம் அமெரிக்க இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்குட்பட்ட பெண்ணை பரிதாபத்துடன் பார்க்கிறது. அத்துடன் சம்பவத்தில் ஈடுபட்ட இராணுவ வீரர்களுக்கு தண்டனையும் வழங்கப்படுகிறது. இவ்வாறான விமர்சனப் படங்கள் மணிரத்தினத்தாலோ, கமலஹாசனாலோ வழங்கப்படவில்லை.

ஃபிரெக்ட் என்ற கலைவிமர்சகர், தத்துவஞானி குறிப்பிடுகிறார். படைப்பானது பார்வையாளனை அல்லது நுகர்வோனை புறச்சூழல்களை மறந்து, படைப்புடன் ஒன்றிவிடச் செய்கிறது. இந்தப் புதிய நுகர்வானது அவனது முடிவுகளாக மாறிவிடுகிறது. இதுவே மணிரத்தினத்தின் வெற்றியாகும்.

இதனை இவர் இரு வேறு வடிவங்களில் சாத்தியமாக்கியுள்ளார். முதலாவது அரசியல் பின்னணியை தமிழக சூழல் சார்ந்த அரசியல் அறிவுக்கு ஏற்ப, இவர் செய்தி வடிவங்களில் தமது கருத்துக்களை இணைக்கின்றார். இனக் கவர்ச்சி, தனிநபர் விமர்சனம், தனிநபர் பாலியல் ஒழுக்கம் போன்றவற்றின் மூலம் மேலோட்டமாக சொல்லப்படும் கதை.

இரண்டாவது சினிமா தொழில்நுட்ப வளம் மழைக்காட்சிகள், தூரத்தே ஒரு படகு - ஆற்றின் நடுவில் அழகான காட்சிகள், பிரம்மாண்டம், குறைந்த ஒளியில் காதல் காட்சிகள் எனத் தொடரும். Hollywood ஐப் போன்று பிரம்மாண்டமாய் மயிர்க்கூச் செறியும் கலவரக் காட்சிகள்...

இவ் விரண்டு கட்டமைப்புக்களும் இவரை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்கின்றன. கருத்தியல் ரீதியான விமர்சனங்களுக்குள் இவர் செல்வதில்லை.

ஒரு புறம் சமூகக் கட்டமைப்பு வன்முறையை (Structural Violence) நியாயப்படுத்தும் இவர் மறுபுறம் எதிர்ப் புரட்சிக்கான படங்களை வெளியிடுகிறார்.

இலங்கைப் பிரச்சினை பற்றி எடுக்கப்பட்ட 'காற்றுக் கென்ன வேலி' என்னும் படம் சென்சாரால் தடை செய்யப்பட்டுள்ளது. சென்னையில் திறந்த வெளியில் இப் படத்தை திரையிடப் பலர் முயன்று வருகின்றனர். பலர் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இக் கட்டத்தில் மணிரத்தினத்தின் படம்....?

ஏற்கனவே இலங்கைத் தமிழ் மக்களை ஐயத்துடன் பார்க்கும் தமிழக மக்களை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தும். எமது மக்களுக்கு எதிராகத் திருப்பும்.

மணிரத்தினம் ஒரு மனித வெடிகுண்டே.

-வானரன்-

# விண்வெளி

**அந்நியார்கள்:- ஏலியன்கள் 70** *தருபவர் - கனி*

இதோ, வடக்கேயிருந்து புசல்காற்றும் பெரிய மேகமும், அத்தோட கலந்த அக்கினியும் வரக் கண்டேன். அதைச் சுற்றிலும் பிரகாசமும் அதின் நடுவில் அக்கினிக்குள்ளிருந்து விளங்கிய சொகுசாவின் நிறமும் உண்டாகியிருந்தது.

அதின் நடுவில் இருந்த நூறு ஜீவன்கள் தோன்றின; அவைகளின் சாயல் மனுஷ சாயலாயிருந்தது.......

ஜீவன்களுடைய சாயல் எப்படியிருந்ததென்றால், அவைகள் எரிகின்ற அக்கினித் தழுவின் தோற்றமும் தீவர்த்தியின் தோற்றமுமாயிருந்தது. அந்த அக்கினி ஜீவன்களுக்குள்ளே உலாவிப் பிரகாசமாயிருந்தது. அக்கினியில் இருந்து மின்னல் புறப்பட்டது.

அந்த ஜீவன்கள் மின்னலின் தோற்றம் போல் ஓடித்திருந்தன. நான் அந்த ஜீவன்களைப் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, பூமியில் ஜீவன்களண்டையில் நாலு முகங்களையுடைய ஒரு சக்கரத்தைக் கண்டேன்.

சக்கரங்களின் ரூபமும், அவைகளின் வேலையும் படிகப்பச்சை வருணமாயிருந்தது; அவைகள் நாலுக்கும் ஒரேவித சாயல் இருந்தது. அவைகளின் ரூபமும், அவைகளின் வேலையும் சக்கரத்துக்குள் சக்கரம் இருக்குமாபோல் இருந்தது.

அவைகள் ஓடுகையில் தங்கள் நாலு பக்கங்களிலும் ஓடும், ஓடுகையில் அவைகள் திரும்புகிறதில்லை. அவைகளின் வட்டங்கள் பயங்கரப்படத்தக்க உயரமாயிருந்தன; அந்த நாலு வட்டங்களும் சுற்றிலும் கண்களால் நிறைந்திருந்தன. அந்த ஜீவன்கள் செல்லும் போது அந்தச் சக்கரங்கள் அவைகள் அருகே ஓடின; அந்த ஜீவன்கள் பூமியிலிருந்து எழும்பும் போது சக்கரங்களும் எழும்பின....

இவை எல்லாம் என்னவென்று கேட்கின்றீர்களா? உலகின் சிறந்த சரித்தரப் பதிவேடு எனக் கூறப்படும் (சிலர் இக் கூற்றை மறுக்கிறார்கள்) பைபிளில் வரும் சில வரிகள்; விவிலியத்தின் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புஸ்தகம்; அதிகாரம் 1 இல் வரும் சில வசனங்களைத் தான் மேலே தந்துள்ளேன். (முடியுமானால் - வசதியானால் 1ஆம் அதிகாரம் முழுவதையும் வாசித்துப் பாருங்கள்.) அப்படி என்ன விஷேசம் இவ்வதிகாரத்தில் உள்ளது எனக் கேட்கின்றீர்கள் அப்படித்தானே! இதோ விசயத்திற்கு வருகின்றேன்.

எலியன்களைப் பற்றி ஆய்வு செய்பவர்களின் தேடலின் போது, இவ் வசனங்கள் அவர்களது கண்களில் பட்டுவிட, இவ் வசனங்களின் பொருட்களைத் துருவித் துருவி ஆராயத் தொடங்கினார்கள். வேத விற்பனர்களும் சமய ஆய்வாளர்களும், தேவனுடைய பிரசன்னத்தை மிகச் சிறப்பாகக் கூறும் வேதாகமத்தின் சிறந்த பகுதி என எசேக்கியேலின் முதலாம் அதிகாரத்தைக் கூற, ஏலியன்கள் - அந்நியர்கள் பற்றி ஆய்வு செய்பவர்களோ என்றால் இப் பகுதியே முதன் முதலில் UFO SIGHTING பற்றிக் கூறும் சரித்திரச்சான்று என்று கூறுகின்றார்கள். அத்துடன் இதைவிடத் தெளிவாகவும், விளக்கமாகவும் எந்தவொரு ஏலியன் பற்றிய குறிப்புகளும் இன்றுவரை தமக்குக் கிடைக்கிவில்லை எனக் கூறுகின்றார்கள்.

முதலில் ஏலியன் விமானம் ஒன்று, விண்கலம் - தரையிறங்கும் காட்சியை விபரித்த எசேக்கியேல், தொடர்ந்து ஏலியன்களையும் கண்டிருக்கின்றார். பின்னர் சக்கரவடிவமான ஏலியன்களின் விண்கலத்தை தன்னால் விளங்கிக் கொண்டமட்டில் கூறியுள்ளார். சக்கரத்துள் சக்கரம் என்பது விண்கலத்தின உள்ளே உள்ள பகுதிகளின் அசைவுகளை வெளியே இருந்து அவதானித்துக் கூறியவை - எழுதியவையாக இருக்கலாம். சக்கரங்களைச் சுற்றிலும் கண்கள் காணப்பட்டன என்பது விண்கலத்தின் ஒளிர்வுள்ள கண்கள் போன்ற கண்ணாடி யன்னல்களாக இருக்கலாம் என ஊகிக்கின்றார்கள். விமானத்தின் சத்தத்தையே இரைச்சல் எனக் கூறியிருக்கலாம் என்பது ஆய்வாளர்களினது எண்ணமாகின்றது. அவரது காலத்தில் அதாவது சுமாராக 2500 அல்லது 3000 ஆண்டுகளின் முன்னது வெறும் குதிரைவண்டிகளைக் கொண்ட கலத்தில் விண்கலம் ஒன்றின் இயக்கத்தைப் பற்றி எதுவுமே தெரியாத, விளங்காத எசேக்கியேல் UFO SIGHTNNG, UFO LANDING மற்றும் ACIEN VISITING பற்றியும் கூறிய கூறியவையே மேலே கூறிப்பிட்ட பகுதி என்பது அவர்களது விளக்கம். இறை நம்பிக்கையிலும் தேவனுடைய விசுவாசத்தில் உறுதியாக இருப்பவர்களும் இக் கூற்று விசனத்தையும் மனவருத்தத்தையும் ஏற்படுத்தினாலும் ஏலியன்கள் பற்றிய ஆய்வாளார்களே தமது கருத்தை மாற்றிக் கொள்வதாக இல்லை. அவர்களது கருத்துப்படி எந்தவொரு மதத்தின் பின்னனியிலும் ஏதோவொரு ஏலியன் தொடர்பு உள்ளது என்பது உறுதியான கொள்கையாகும். பைபிளில் ஏராளமான இடங்களில் ALIEN கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது எனவும் இவ்வாய்வாளர்கள் கூறுகின்றனர்.










# கனடிய பொருளாதாரம்

## கணக்கியல் பொருளியல்



உங்கள் வியாபாரம் திட்டத்தில் உங்கள் வியாபாரத்தின் முகாமையாளர்களைப் (Management) பற்றி குறிப்பிட வேண்டும். ஏனென்றால் பொதுவகா வங்கியாளர்கள், ஒரு வியாபாரத்தின் முகாமையாளர்கள் யார் என்றும் அவர்கள் தகைமைகள் என்ன என்.றும் பார்ப்பார்கள். எனவே அவர்களுக்கு உள்ள தனித்துவ திறமைகளையும் அவை எப்படி உங்கள் வியாபாரத்திற்கு உதவும் என்றும் குறிப்பிட வேண்டும்.

என்ன சேவைகள் நீங்கள் வழங்குகின்றீர்கள் என்று குறிப்பட வேண்டும். இவ் விடயங்களில் உங்களுடைய பொருட்கள் மற்றும் சேவைகளும் எப்படி உங்களுக்கு போட்டியாளர்களின் (Competiton) பொருட்களில் இருந்தும் மற்றும் சேவைகளில் இருந்தும் மாறுபட்டவை என்பது குறிப்பிடவேண்டும்.

அடுத்ததாக உங்களது வியாபார அணுகுமுறை (Marketing) எப்படி இருக்கப் போகின்றது என்று குறிப்பிட வேண்டும். இவ் விடயத்தில் பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

1. உங்கள் வாடகையாளர்களின் தொகை

2. உங்கள் வியாபாத்தை அண்மித்துள்ள இடத்திலுள்ள அனைத்து வாடிக்கையாளர்களுடன் ஒப்பிடும் போது குறிப்பிட வேண்டும். அவர்களது அறியாமைகள், பலவீனங்கள் என்ன? திறமையான தொழிலாளர்களை எப்படி உங்கள் வியாபரத்தில் வேலைக்கு சேர்த்துக் கொள்வதும் உங்கள் வியாபாரத்தில் வேலைக்கு சேர்த்துக் கொள்வதும் சம்பந்தமான விடயங்களை குறிப்பிட வேண்டும்.

இறுதியாக உங்கள் வியாபாரக் கணக்கு சம்பந்தமான தகவல்கள் (Financial Data) குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு வியாபாரத் திட்டத்திலும் இவ் விபரங்கள் இருக்க வேண்டும் என்பது முக்கியமானதாகும். இவ்விடயத்தில் உங்கள் வாடிக்கையாளர்களின் தொகை என்ன விகிதாசாரம்?

3. வியாபாரத்தில் உங்கள் போட்டியாளர்கள் யார்? அவர்களின் திறமைகள் (Strengths) மற்றும் பலவீனங்கள் (Weaknesses) என்ன?

மேற்குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமான தகவல்களை எவ்வளவு சரியாக நீங்கள் சேகரிக்கின்றீர்கள் என்பது மிகவும் முக்கியம். இவ் விடயங்களை வர்த்தக சஞ்சிகைகள் (Trade Magazine) வாசிகசாலைகள், (Libraries), இன்ரநெற் (Internet) மற்றும் அரசாங்கப் பிரசங்கங்கள் என்பன மூலம் சேகரித்துக் கொள்ளலாம்.

அடுத்ததாக உங்களுடைய அன்றாட வியாபார நடவடிக்கைகள் (Business Operation) எப்படி இருக்கப் போகின்றன என்று குறிப்பிட வேண்டும். இவ் விடயத்தில் உங்கள் வியாபாரமானது எந்த இடத்தில் அமைந்திருக்கின்றது என்பது முக்கியம். அதாவது உங்கள் வியாபார இடமானது உங்கள் வாடிக்கையாளர்களுக்கு அண்மித்து உள்ளாதா? உங்கள் வியாபார இடத்தை சொந்தமாக வாங்குன்றீர்களா அல்லது வாடகைக்கு எடுக்கின்றீர்களா? என்பன போன்ற விடயங்களை கவனிக்க வேண்டும்.

அடுத்ததாக உங்கள் தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டும் அவர்களது திறமைகள் மற்றும் பலவீனங்கள் என்ன? திறமையான தொழிலாளர்களை எப்படி உங்கள் வியாபாரத்தில் வேலைக்கு சேர்த்துக் கொள்வது சம்பந்தமான விடயங்களை குறிப்பிட வேண்டும். இறுதியாக உங்கள் வியாபார கணக்கு சம்பந்தமான (Financial Data) ஒவ்வொரு வியாபாரத் திட்டத்திலும் இவ் விபரங்கள் இருக்க வேண்டும் என்பது முக்கியமானதாகும். இவ் விடயத்தில் எதிர்வரும் ஒரு வருடத்திலோ அல்லது இரண்டு வருடத்திலோ உங்கள் வியாபார வரவு மற்றும் செலவு சம்பந்தமான உங்கள் எதிர்பார்ப்புகள் என்ன என்பன பற்றிக் குறிப்பிட வேண்டும். இவ் விடயத்தில் நீங்கள் எடுத்துக் கொண் ட அணுகுமுறைகளை குறிப்பிட வேண்டும். இப்பகுதியில் இரண்டு முக்கியமான உப பகுதிகள் இருக்கும்.

1. எதிர்பார்க்கப்பட்ட வரவு செலவு அறிக்கை, மற்றும் வியாபார சொத்துக்கள் பற்றிய அறிக்கை.
2. உங்கள் தனிப்பட்ட உடமைகள் சம்பந்தமான அறிக்கை.

மேற்குறிப்பிட்டவாறு வியாபாரத்திட்டமானது (Business Plan) ஒரு வியாபாரத்திற்கு மிகவும் முக்கியமானதொன்றாகும். இவ் வியாபாரத் திட்டமானது உங்கள் வியாபாரத்தை முறையாக வழி நடாத்திச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும். அதே நேரத்தில் மற்றைய முதலீட்டாளர்களை உங்கள் வியாபாரத்தில் சேர்த்துக் கொள்வதற்கும் மற்றும் உங்கள் வியாபாரத்திற்கு தேவையான வியாபாரக் கடன்களை (Business Loan) பெறுவதற்கும் உதவியாக இருக்கும்.


